**FQJ** Register No. | | | | | | | | |

4962–21

(For the candidates admitted from 2009-2010 to 2016-2017)

**B.A.LL.B./B.A.B.L. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Five-year Regular Course)

Second Year – Fourth Semester

**FAMILY LAW – II**

Time : Three hours Maximum : 100 marks

**PART A** — (3 × 12 = 36 marks)

Answer THREE of the following in not exceeding six pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றிற்கு விடையளிக்கவும்.

1. Who is Karta? Examine the powers of the Karta to contract debts and to alienate the joint family property.
கர்த்தா என்பவர் யார்? கடன் வாங்க ஒப்பந்தம் மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்தை பாராதீனம் செய்தல் ஆகியவற்றில் கர்த்தா பெற்றுள்ள அதிகாரங்களை ஆராய்க.

2. Discuss the rules of succession applicable to Hindu male dying intestate under the Hindu law of inheritance.
இந்து இறங்குரிமை சட்டத்தின் கீழ் இந்து ஆண் உயில் எழுதாமல் இறந்தால் பொருந்தக்கூடிய இறங்குரிமை விதிகளை விவரி.

3. Explain the term 'Hiba' under Muslim Law. Explain the requirements for completion of 'Hiba'.
முகமதிய சட்டத்தில் "ஹிபா" என்ற சொல்லை விவரிக்கவும். "ஹிபா" முற்றுப்பெற தேவையானவற்றை விவரிக்க.

4. Explain the rules of succession applicable to female intestate under Christian law of inheritance.
கிறிஸ்துவ இறங்குரிமை சட்டத்தின் கீழ் பெண் உயில் எழுதாமல் இறந்தால் பொருந்தக்கூடிய இறங்குரிமை விதிகளை விவரி.

5. Explain the various provisions for execution of privileged will and unprivileged will.
சிறப்புரிமை பெற்ற உயில்கள் மற்றும் சிறப்புரிமை அற்ற உயில்கள் ஏற்படுத்துவதற்கான சட்ட வகைமுறைகளை விளக்குக.

**PART B** — (8 × 6 = 48 marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding two pages each :
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக.

(a) Public Mosque
பொது மசூதி

(b) Doctrine of Cypres
இயன்றளவு கோட்பாடு

(c) Pre-emption
வாங்கும் முன்னுரிமை

(d) Marz-ul Maut
மரணப்படுக்கைக் கொடை

(e) Kinds of legacy
உயில் வழி கொடையின் வகைகள்

(f) Doctrine of Representation
பிரதிநிதித்துவம் கோட்பாடு

(g) Special mode of acquiring a domicile in India
இந்தியாவில் வாழ்வகம் பெறுவதற்கான தனிப்பட்ட முறை

(h) Partial partition
பகுதியாக பாகப்பிரிவினை

(i) Doctrine of Radd
மீட்டளிப்பு கோட்பாடு

(j) Tarwad.
தார்வாடு.

**PART C** — (4 × 4 = 16 marks)

Answer FOUR of the following (in not exceeding two pages each) by referring to relevant provisions of law and decided cases with cogent reasons.
பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A Hindu woman dies intestate leaving behind her mother, her husband, son and daughter. Distribute her estate.
ஒரு இந்து பெண்மணி உயில் எழுதாமல் இறக்கும் பொழுது தனது தாய், கணவன், மகன் மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

8. A Christian male dies leaving his two daughters of predeceased son and four sons of predeceased daughter. Distribute his estate.
ஒரு கிறித்துவ ஆண் இறக்கும் பொழுது அவருடைய முன்னரே இறந்துவிட்ட மகனின் இரண்டு மகள்கள் மற்றும் முன்னரே இறந்துவிட்ட மகளின் நான்கு மகன்களை விட்டு விட்டு இறக்கிறார். அவரது சொத்தினை பங்கிடுக.

9. A Sunni Muslim died leaving behind his wife, mother, full sister and daughter. Distribute the estate among them.
ஒரு சன்னி பிரிவினை சார்ந்த முகமதியர் இறக்கும் பொழுது அவரது மனைவி, தாய், முழு சகோதரி மற்றும் மகளை விட்டு விட்டு இறக்கிறார். சொத்தினை அவர்களுக்கு பங்கிடுக.

10. A sum of money was bequeathed to A, B and C to be equally divided among them. B dies before the testator. 'A', claims half the legacy – Decide.
'A', 'B' மற்றும் 'C' ஆகியோருக்கு சமமாக பிரித்து எடுத்துக் கொள்ளும்படி ஒரு தொகையினை உயில் மூலமாக அளிக்கப்பட்டது. 'B' என்பவர் உயில் எழுதியவருக்கு முன்னால் காலமாகி விட்டார். 'A' என்பவர் தொகையின் பாதியினை கோருகிறார். தீர்வு செய்க.

11. A Shia Muslim female dies leaving her father, mother, brother, husband and two sons. Distribute her property.
ஷியா வகுப்பை சார்ந்த முகமதிய பெண் ஒருவர் அவளது தந்தை, தாய், சகோதரன், கணவர் மற்றும் இரண்டு மகன்கள் ஆகியோரை விட்டு விட்டு இறக்கிறார். அவளது சொத்தினை பங்கிடுக.

12. A female Hindu inherited property from her father. Then she died leaving her mother, husband, two sons and two daughters. Distribute her estate.
ஒரு பெண் இந்து தந்தையிடமிருந்து இறங்குரிமையில் சொத்தைப் பெற்றார். பிறகு அவர் தனது தாய், கணவன், இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்களை விட்டு இறந்து விடுகிறார். அவரது சொத்தை பங்கிடுக.

———————